## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.107/2010**

திரு. முருகசாமி (D.W –2) **11.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 10 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா என்னுடைய தகப்பனாரால் முதலில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். தகப்பனார் காலத்தில் இருந்து தாவா சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். தாவாவில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை சங்கதிகளுக்கான அறிவுரைகள் என்னால் சொல்லப்பட்டது என்றால் ஆமாம். முதல் விசாரணையில் என்னுடைய தகப்பனாரின் பெண் வாரிசுகளை தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியவில்லை தற்சமயம் ஞாபகம் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்துப் பார்த்து சொல்லுமாறு கேட்டபோது அவ்வாறுதான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

2. இரண்டு பெண் மக்களும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று எதிர்வழக்குரையில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. என்னுடைய தகப்பனார் தாவா சொத்துக்களை தங்கமுத்து வகையறா கிரையம் பெற்ற பிறகுதான் தாக்கல் செய்தார் என்றால் சரி. ஆனால் அதற்கு முன்பே சட்ட அறிவிப்பு அனுப்பி விட்டார். சட்ட அறிவிப்பின் நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் நான் தற்சமயம் தான் நீதிமன்றத்திற்கே வந்துள்ளேன். தாவா சொத்துக்கள் முதலில் கொண்டாகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு. எல்லோராலும் சேர்ந்து

பொதுவாக கிரையம் செய்யப்பட்டது. சொத்துக்களை பொறுத்து 1966 ஆம் வருடம் பெரிய கிரயம் பாகம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

3. அந்த பாககாரின் படி என்னுடைய தகப்பனாருக்கு கே செடியூல் சொத்துக்கள் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கொண்டா கவுண்டர் 1946 இல் சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது அந்த வருடம் நான் பிறக்கவில்லை. 1969 ஆம் வருடம் தங்கமுத்து வகையறா சொத்துக்களை கிரயம் பெற்றபோது கிரைய ஆவணத்தில் சொத்துக்களின் உரிமையை பொறுத்து 1946 ஆம் வருட கிரைய ஆவணம் மற்றும் 1966 ஆம் வருடத்தின் பாகப்பிரிவினை ஆவணம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் தவறு. 1966 ஆம் வருடம் பாகப்பிரிவினை ஆவணம் மட்டும் சரி மற்ற ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4. தங்கமுத்து சொத்துக்களை கிரையம் பெற்ற விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரிந்து கொண்டேன். தங்கமுத்து பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்பதை பொறுத்து எந்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரி. எங்களுக்கு அ.வ.எண்.153/1970, 297/1972 வழக்குகள் படி அந்த சொத்துக்கள் எங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை வழக்கு எண் 153/1970 படி என்னுடைய தகப்பனார் க.ச.எண்.137/ 2 ஏ 2 1.25 ஏக்கர் சொத்துக்களை மட்டும் தான் சுவாதினம் எடுத்துள்ளார் என்றால் சரி. அந்த சொத்துக்களை பொறுத்து இரண்டாவது மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.

5. பி செடியூல் சொத்துக்களை பொறுத்து சுவாதீன நடவடிக்கை என்னுடைய தகப்பனார் மேற்கொள்ளவில்லை என்றால் தவறு. நாங்கள் தான் முதலில் இருந்து சுவாதீனத்தில் உள்ளோம். அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. நானும் என்னுடைய தகப்பனாரோ தாவா பி செடியூல் சொத்துக்களில் சுவாதீனத்தில் இல்லை என்றால் தவறு சுவாதீனத்தில் உள்ளோம். என்னுடைய

தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் சொத்துக்களை பார்வையிட்டு அளவீடு செய்த பிறகு நீதிமன்ற ஆணையாளர் அவருடைய அறிக்கையில் சொத்துக்களை சரிவர பாகம் பிரிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டு சொத்துக்களை பிரிக்க நடவடிக்கை எடுக்குமாறு சொல்லியுள்ளார் என்றால் சரி. அதற்கு வழக்கு நடந்து வருகிறது.

6. என்னுடைய எதிர்வழக்குரையில் தாவா பொய் பெண் மக்கள் பாகம் கேட்கவில்லை எந்த சொத்துக்களும் கேட்கவில்லை என்று சொல்வது பொய் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய தகப்பனார் சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் தவறு. பட்டாவே உங்கள் பெயரில் தான் உள்ளது. எதிர் வழக்குரை தாக்கல் செய்த போது என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றுதான் சொல்லி உள்ளேன் என்றால் தவறு. அவ்வாறு சொல்லிவிட்டு தற்சமயம் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. முதல் விசாரணை வாக்குமூலம் 5 வது பத்தில் முதல் 3 வரிகள் சரியானவை என்றால் ஆமாம். அந்த சங்கதி க.ச.எண்.137/2 ஏ 2 சொத்துக்களை பொறுத்துதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்துக்களை என்னுடைய தகப்பனார் மூன்றாவது வாதி புஷ்பவதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தங்கமுத்து பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் என்னுடைய தகப்பனாரை தவிர மற்ற 6 பாகதாரர்கள் அந்த கிரைய ஆவணத்தில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் அந்த கிரையா ஆவணத்தை பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய தகப்பனார் 1966 ஆம் வருட கிரையா ஆவணத்தில் கையொப்பம் செய்ய தவறியதால் தான் இந்த வழக்கே தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறு.

8. தாவா பி பட்டியலிட்ட சொத்தில் நான் சுவாதீன அனுபவத்தில் இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா என் தகப்பனார் தாக்கல் செய்துள்ளது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாவில் என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்தில் என்னுடைய தாயாருக்கும் சகோதரிக்கு மட்டும் உரிமையும் பாத்தியமும் இருப்பதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. நானும் சட்டப்படியான வாரிசுதாரர் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தகப்பனாருக்கு நானும் புஷ்பவதியும் தான் வாரிசுதாரர்கள் என்றால் ஆமாம். என்னுடைய தாயார் ராஜம்மாள் புஷ்பவதி உடன் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். 2016 ஆம் வருடம் ராமசாமி அவருடைய பெண் வீட்டிற்கு உடல்நிலை சரியில்லாமல் சென்று விட்டார் என்றால் சரி. போய்விட்டார் அவ்வப்போது வந்து செல்வார். என்னுடைய தகப்பனார் நான் தற்போது வசித்து வரும் வீடு மற்றும் அதற்கு முன்பு உள்ள ஏழு சென்ட் நிலத்தை கிரயம் பெற்றார் என்றால் சரி.

2. நான் வசிக்கும் மூன்று செண்ட் வீட்டிற்கு முன்புறம் உள்ள பகுதியில் என்னுடைய அப்பா ராமசாமி உயிருடன் இருந்தபோது வசித்து வந்தார் என்றால் ஆமாம். அவர் வசித்து வந்த வீட்டை 2017 ஆம் ஆண்டு ராமசாமி விற்பனை செய்து விட்டார் என்றால் தவறு. பேரன்களுக்கு தானமாக ஏற்படுத்திக் கொடுத்தார். யார் பெயருக்கு என்றால் என்னுடைய தங்கச்சி மகன் சண்முகத்திற்கு கொடுத்துள்ளார். ராமசாமி தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட பிறகு அவர் அவிநாசி சென்று பிறகு அந்த சொத்து விற்பனை செய்யப்பட்டது என்றால் ஆமாம்.

3. அதன் பிறகு அவர் அவிநாசியில் தான் வசித்து வந்தார் என்றால் ஆமாம். அவரிடம் அவருடைய கடைசி காரியங்கள் சண்முகம் வீட்டில் நடந்தது என்றால் ஆமாம். நான் தான் போய் செய்தேன். என்னுடைய மகன் பெயர் பிரசாந்த் என்றால் ஆமாம். என்னுடைய மகனுக்கும் என் தகப்பனார் ராமசாமிக்கும் இடையே

சொத்தைப் பொறுத்து பிரச்சனை ஏற்பட்டு இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. அதில் நான் ஒரு தரப்பினர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆனேன் என்றால் தவறு. நான் என் மகனுடன் நல்ல போக்குவரத்தில் இல்லை.

4. என்னுடன் என்னுடைய தகப்பனார் நல்ல போக்குவரத்தில் கடைசி காலத்தில் இல்லை என்பதால் தான் அவர் மகள் வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றால் தவறு. என்னுடைய மகன், மகள் மற்றும் நான் சொத்துக்களை பொறுத்து திருப்பூர் முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய மகன் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கில் 388/2017 வழக்கில் ராமசாமி என்ன எதிர்வாதம் தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

5. எனக்கும் என்னுடைய தகப்பனார் ராமசாமிக்கும் அவருடைய கடைசி காலத்தில் போக்குவரத்து இல்லை என்றால் தவறு. நான் ஈரோட்டில் வசித்து வந்தேன். அவ்வப்போது வந்து பார்த்து செல்வேன். என்னுடைய தகப்பனார் தற்போது நான் வசித்து வரும் வீட்டை நான் குடியிருந்து வருவதற்காக கொடுத்திருந்தார் என்றால் ஆமாம். எனக்கு வசிப்பதற்காக கொடுத்த வீட்டை என்னுடைய தாயார் ராஜம்மாள் உயிருடன் இருக்கும் வரை அனுபவம் செய்த பிறகு எனக்குச் சென்றடைய வேண்டும் என்று என்னுடைய அப்பா உயில் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் தவறு. அவ்வாறு ஏற்படுத்தவில்லை.

6. என்னுடைய தகப்பனார் 1970 ஆம் வருடம் தாவா சொத்தை பொறுத்து தாவா தாக்கல் செய்த போது என்ன விஸ்தீரனத்திற்கு தாக்கல் செய்தார் என்றால் 10.58 ஏக்கருக்கு தாக்கல் செய்தார். பாகப்பிரிவினையின்படி என்னுடைய தகப்பனாருக்கு 10.58 ஏக்கர் சொத்தில் 1.90 ஏக்கர் சொத்து வரும் என்றால் ஆமாம்.அ.வ.எண்.153/1970 பாகக்காரர் வழக்கில் சொத்து என்னுடைய அப்பாவிற்கு கொடுக்கப்பட்டு மீதி சொத்திற்கு நீதிமன்றத்தில் புதிய வழக்கு தாக்கல் செய்யுமாறு சொல்லப்பட்டது என்றால் ஆமாம். அதனால் இந்த வழக்கு என்னுடைய தகப்பனார்

தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அவருக்கு வர வேண்டிய 40 சென்டிர்க்காக தாக்கல் செய்துள்ளார். தாவா தாக்கல் செய்த சமயத்தில் 40 சென்ட் நிலத்தை பொறுத்து என்னுடைய அப்பா பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் இருந்தது என்றால் பட்டா, சிட்டா என் அப்பா பெயரில் தான் இருந்தது. பாகப்பிரிவினையும் படி என்னுடைய தகப்பனாருக்கு 1.25 ஏக்கர் சொத்தை என்னுடைய தகப்பனார் என்னுடைய சகோதரியான புஷ்பவதிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்தார் என்றால் ஆமாம்.

7. அந்த வழக்கு மேல்முறையீடு மற்ற பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு முழு விசாரணைக்கு பின்பு புஷ்பவதிக்கு பாத்தியப்பட்டது என்று முடிவு செய்யப்பட்டு என்னுடைய சகோதரி புஷ்பவதி சொத்துக்களை சுவாதீனம் எடுத்தார் என்றால் சரி. என் அப்பா தான் சுவாதீனம் எடுத்தார். இந்த வழக்கு தாவா சொத்து என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சுயாஜித சொத்து என்றால் அதைப் பற்றி தெரியாது. என்னுடைய தகப்பனார்டன் உயிருடன் இருந்தபோது தாவா சொத்துக்கள் என்னுடைய அம்மா ராஜம்மாள் என்னுடைய சகோதரி புஷ்பவதி அனுபவம் செய்த பிறகு சண்முகத்திற்கு சென்றடைய வேண்டும் என்று ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் அம்மாதிரி எதுவும் ஏற்படுத்தவில்லை.

8. இந்த விபரங்களை என்னுடைய தகப்பனார் என் மகன் தாக்கல் செய்த வழக்கின் எதிர் வழக்குரையில் தெரிவித்துள்ளார் என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு எந்த தொடர்பும் இல்லை எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் என்னுடைய தாயார் ராஜமாலுக்கும் என்னுடைய சகோதரி புஷ்பவதிக்கும் உயிருள்ளவரை அனுபவம் செய்து கொள்ளும் பாத்தியமும் அதன் பிறகு சண்முகத்திற்கு சென்றடையுமாறு தான் என் அப்பா முடிவு செய்து உயில் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் தவறு. எனக்கு தாவா சொத்தில் உரிமையோ பாத்திமோ

இல்லை என்றால் தவறு. வாதி கோரியுள்ளது போல் தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.11 18:58:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.